**15.04.2026.**

**O.S.No.105/2011**

**பி.வா.சா. 1: இளங்கோ**

**<u>வாதி தரப்பில் கூடுதல் பிரமாண வாக்குமூலத்தின் அடிப்படையில் குறுக்கு விசாரணை</u>:-**

2) இவ்வழக்கின் வழக்கு சொத்துக்கள் நடேசனுக்கு பாக பத்திரத்தில் வந்து பூர்வீக சொத்து என்றால் சரிதான். அந்த சொத்துக்களை பொறுத்து என் அப்பா நடேசன் எவ்வித ஏற்பாடு ஆவணமும் செய்யாமல் இறந்துவிட்டார் என்றால் நான் குழந்தையாக இருக்கும் போதே இறந்து விட்டார். அப்போதே அவருக்கு வாதி பரமேஸ்வரி, நான், தாயார் மற்றும் எனது சகோதரர் பாலகிருஷ்ணன் ஆகியோர் வாரிசுகள். மேற்படி வாரிசுகளில் யாரேனும் எனக்கு பாகம் வேண்டாம் என்று பதிவு செய்யப்பட்ட விடுதலை பத்திரம் எழுதி கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. பதிவு செய்யப்படாத விடுதலை பத்திரத்தை என் தாயாரும், பரமேஸ்வரியும் எனக்கும் பாலகிருஷ்னனுக்கும் எழுதி கொடுத்துள்ளார். நான் சொல்வது போல பரமேஸ்வரி எனக்கு குறிப்பாக எவ்வித விடுதலை பத்திரமும் எழுதி கொடுக்கவில்லை என்றும் அதில் உள்ள கையெழுத்தும் , கைரேகையும் அவருடையது அல்ல என்றால் சரியல்ல.

3) என் அப்பா விட்டு சென்ற சொத்தை நானும் என் சகோதரனும் தான் எழுதி கொண்டோம் என்றால் சரிதான். அவ்வாறு பரமேஸ்வரியை விட்டு விட்டு பாகம் செய்ததால் தான் வாதி தாவா சொத்துக்களில் தனக்கு 1/4 ல் பாகம் உள்ளது என்றும் மேலும் பாகம் பத்திரம் செல்லாது என்று வழக்கு போட்டுள்ளார் என்று சொன்னால் சரிதான். பாக பத்திரத்தின் அடிப்படையில் தான் பட்டா, சிட்டா வை மாற்றினேன் என்றால் விடுதலை பத்திரத்தின் அடிப்படையில் மாற்றினேன். மேற்படி பத்திரம் வழக்கிற்காக பொய்யாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பரமேஸ்வரியின் படிப்பு மற்றும் திருமண செலவிற்காக நான் செலவு செய்துள்ளேன். மேற்படி பத்திரத்தில் அவ்வாறு பரமேஸ்வரியின் படிப்பு மற்றும் திருமண செலவிற்காக நான் செலவு செய்ததாக எழுதப்படவில்லை என்றால் சரிதான்.

4) மேற்படி பத்திரத்தை தங்கவேல் என்பவர் தயார் செய்தார். தங்கவேல் தயார் செய்ததாக எந்த கையெழுத்தும் இல்லை என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தில் பேனாவால் எழுதப்பட்டும், சொத்து விவரங்கள் சேர்க்கப்பட்டும் இடைசெருகல்கள் உள்ளது என்றால் சரிதான். அந்த திருத்தங்கள் யாரால் செய்யப்பட்டது என்ற குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். ஒவ்வொரும் கருப்பு, புளு, மற்றும் மற்றொரு கருப்பு மையினால் கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். அவர் அவர்கள் வைத்திருந்த போனாவால் போட்டார்கள். என் தாயார் என்னுடன் தான் உள்ளார்கள் என்றால் இல்லை. ஜீவனாம்சம் கொடுத்துவிட்டதால் தனியாக உள்ளார். மேலும் அவருக்கு அவருடைய அப்பா வீட்டு நிலமும் உள்ளது. அந்த விடுதலை பத்திரத்தில் என் தாயாருக்கும், பரமேஸ்வரிக்கும் சேர்த்து ரூ.5000/- கொடுக்கப்பட்டதாக சொன்னால் சரிதான். அவ்வாறு ரூ.5000/- தொகை கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்ட நிலையில் மேற்படி பத்திரம் கண்டிப்பாக பதிவு செய்யப்பட்டு இருக்க வேண்டும் என்றும் அவ்வாறு பதிவு செய்யப்படாததால் அந்த பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி விடுதலை பத்திரம் வாதியின் 1/4 பாக உரிமையை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

5) நான் கூடுதல் பிரமாண வாக்குமூலத்துடன் ஒப்படைத்துள்ள ஆவணங்கள் பிவாசாஆ.11 முதல் பிவாசாஆ.14 வரையிலான ஆவணங்கள் ஏதும் வாதி கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். பாக பத்திரம் எழுதிய பின்னிட்டு தான் பட்டா, சிட்டா ஆவணங்கள் தனியாக என் பெயரில் மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணங்கள் பிவாசாஆ.15 முதல் பிவாசாஆ.26 என்றால் சரிதான். நானும் என் சகோதரனும் எழுதி கொண்ட பாக பத்திரமே சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்பதால் அதன் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட வருவாய் துறை ஆவணங்களும் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வாதிக்கு தாவா சொத்துக்களில் 1/4 பாகம் உரிமை உள்ளதால் அவருக்கு சேர வேண்டிய பாகத்தை சட்டப்படி கொடுக்க நான் கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல.

வாதிக்கு நான் ஏற்கனவே நிறைய செலவு செய்துள்ளேன். நான் சொல்வது போல வாதிக்கு நான் செலவு செய்ததாக சொல்வது பொய் என்றும் விடுதலை பத்திரத்திலேயே ரூ.2500/- தான் கொடுத்தாக சொல்லப்பட்டுள்ள நிலையில் வழக்கிற்காக நிறைய செலவு செய்துள்ளேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

2,5 பிரதிவாதிகள் தொடர்பாக குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2026.04.15 17:52:46 +0530

**Subordinate Judge, Attur.**